# எட்டுத்தொகையில் விலங்கினங்கள் – பண்டமாற்றும் பாதீடும்

*முனைவர் ஆ. புஷ்பா சாந்தி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வெய்க்காலிப்பட்டி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI: https://doi.org/10.5281/zenodo.14958633

### *முன்னுரை*

*சங்க இலக்கியங்களில் பண்டமாற்று குறித்து மிகுதியானச் செய்திகள் பதிவாகியுள்ளன. எல்லா திணை மக்களும் தமக்குத் தேவையான உணவுகள் அனைத்தையும் தத்தம் நிலங்களிலேயே உற்பத்தி செய்ய முடியவில்லை. தம் நிலங்களில் உற்பத்தி செய்த பொருட்களைக் கொடுத்து பிற நிலங்களில் உற்பத்தி செய்த பொருட்களைப் பண்டமாற்றாகப் பெற்றுக் கொண்டனர். தம் நிலத்தில் பயிர் செய்யும் பொருட்களைத் தவிர வேறு எதனையும் அவர்களால் உற்பத்தி செய்யும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லை. ஆதலால் தான் பண்டமாற்று உருவானது. பல்வேறு பொருட்களைப் பண்டமாற்றாக கொடுத்து வாங்கியதாக சங்க இலக்கியங்கள் கூறினாலும் அவற்றுள் விலங்குகள் எவ்வாறு பண்டமாற்றில் இடம் பெற்றிருந்தன என்பதைக் கீழ் காணும் குறிப்புகள் வழி அறியலாம்.*

### *பண்டமாற்றில் விலங்கினங்கள்*

*குறிஞ்சி நில மக்கள் தங்கள் நிலங்களில் கிடைக்கும் பொருட்களை முல்லை நிலங்களில் கொடுத்து அதற்குப் பதிலாக பால், நெய், வெண்ணெய், தயிர், மோர் போன்றவற்றைப் பெற்றுள்ளனர். கால்நடைகளை வளர்த்தல் அவற்றை உணவாகப் பயன்படுத்துதல் முல்லை நிலத்தில் விவசாயத்தோடு இணைந்து வளர்ந்த போக்காக அமைந்தது. கால்நடைகளின் மூலம் பெற்ற உணவைப் பதப்படுத்துதல், பண்ட மாற்றம் செய்தல் போன்றவை இந்நிலத்தில் பெண்களின் இன்றியமையாத பங்களிப்பாகும். ஆயர் மகளிர் ஆடு, பசு ஆகியவற்றை வளர்த்து பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் போன்றவற்றை விற்று கால்நடைகள் வாங்கிய செய்தியைப் பெரும் பாணாற்றுப்படை பதிவு செய்துள்ளது.*

**“நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்**
**எருமை நல்லான் கருநாகு”** ***(பெரும்பாண்:153-165)***

*இவ்வாறாக ஆயர்கள் கால்நடைகளால் கிடைக்கும் பொருட்களின் மூலம் பொருளாதாரத்தில் வலிமையாக இருந்துள்ளதைப் பெரும்பாணாற்றுப்படை வழி அறிய முடிகின்றது, இறைச்சி தவிர்த்த பால், மோர், தயிர், வெண்ணெய், நெய் போன்ற உணவு வகைகளை முல்லை நிலம் அறிமுகம் செய்கிறது, கால்நடை வளர்ப்பும், அவற்றைப் பராமரிப்பதிலிருந்தும் பெற்ற இந்த வளர்ச்சியை ஏனைய நில மக்கள் பண்டமாற்றின் வழி அனுபவித்தனர் (ஞா.ஸ்டீபன்:2010:38).*

ஆட்டு, மாட்டு இடையர்கள் பால், நெய் முதலிய பண்டங்களைக் குறிஞ்சி நிலக் கிராமங்களில் விற்று அவற்றிற்குப் பதிலாக (பொன் அன்றி) நெல் வாங்கிச் சென்றனர் என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுவதால் அவர்களது சிக்கன அறிவுடை வாணிப மரபுகள் புலனாகின்றன. பெரும்பாலும் வணிகர்கள் ஒரு குழுவாக இயங்கினர். வணிகக் குழுவினராக இயங்கும் பொதுமரபு தவிர தலைச்சுமையாகப் பண்டங்களைக் கொண்டு சென்று விற்போர் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். வழிப்பறிக் கொள்ளைக்காரரை அஞ்சி வாணிகச் சாத்துக்கள் இடம் விட்டு இடம் செல்லும் போதெல்லாம் சங்க காலத்திலும் (சென்ற சில ஆண்டுகளுக்கு முன்புவரை போல) குழுவினராகவே சென்றனர். இத்தகைய சாத்துக்களுக்கு வழித்துணையாகச் செல்லுதற்குப் போர் வீரர்களை நியமிப்பதுண்டு. இத்துணைக் காப்பிருந்தும் கள்வர் தண்ணுமையை முழங்கினால் சுற்றுப்புறத்தில் வாணிகச் சாத்து வருவது கொள்ளப்படும். ஆறலைக் கள்வரைப் பற்றிப் பல குறிப்புக்கள் கிடைப்பதால் வாணிகச் சாத்துக்கள் எப்போதும் அச்சமின்றி நெடுஞ் சாலையில் சென்றனர் என்று சொல்ல முடியாது என்று க.சுப்பிரமண்யன் கூறுகின்றார். (சங்க கால வாழ்வியல்:2010.309).

மீன், கருவாடு, உப்பு, நெய் ஆகியவை நெய்தல் நிலத்தில் முதன்மையான உணவு உற்பத்தியாக அமைந்தது. ஏனைய உணவுப் பொருட்களுக்காக இவர்கள் பண்டமாற்று செய்துள்ளனர். உப்பு கொடுத்து நெல் பெற்று வந்த செய்திகளைக் குறுந்தொகை (269), அகநானூறு (60), நற்றிணை (183) பாடல் வரிகள் பதிவு செய்கின்றன.

**"உப்பு நொடை நெல்லின் மூரல் வெண்சோறு"**

**(அகம்:60:4)**

**"உப்பை மாறி வெண்ணெல் தரீஇய"**

**(குறுந்:269.5)**

**"தம்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி"**

**(நற்:183:1,2)**

இவ்வாறு உப்புக்குப் பதிலாக வெண்ணெல் பெறப்பட்டு சோறாக்கி நெய்தல் நில மக்கள் உண்ட செய்தியை மேற்குறித்த பாடல் வரிகள் பதிவு செய்துள்ளன. மருத நிலங்களில் இருந்து சென்று வெண்ணெல் கொண்டு நெய்தல் நிலத்தில் கொடுத்து அவர்களிடம் உப்பினைப் பெற்று வந்த செய்தினை நற்றிணை 183ஆவது பாடல் விளக்குகின்றது. பண்டமாற்றாக கிடைத்த பொருட்களை வைத்தே மனிதன் தன் உணவுத் தேவையினை முழுமையாக பெற்றிருக்கிறான் என்பதனை மேற்குறித்த பாடல் வரிகள் மூலம் அறிய முடிகின்றது. பண்டமாற்றில் இறைச்சியும் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பண்ட மாற்றாக விலங்குகளும் விலங்குகளிடமிருந்து மனிதனால் எடுக்கப்பட்ட பொருட்களும் காணப்படுகின்றன. ஆட்டின் பாலினை விற்கும் இடைக்குடியில் பிறந்தவன் ஆட்டின் பாலிற்குப் பதிலாக மனைகள்தோறும் சென்று உணவினைப் பெற்றதாக குறுந்தொகைப் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

**"பறியுடைக் கைபர் மறியினத்து ஒழிய**
**பாலொடு வந்து கூழொடு பெயரும்**
**ஆடுடை இடைமகன் சென்னி"**

**(குறுந்:221:1-4)**

கள்ளுக்கு விலையாக காட்டுப்பசுவின் இறைச்சி, பசு, யானையின் கொம்பு, யானையின் ஆண் கன்று போன்றன கொடுக்கப்பட்டன என அறிய முடிகின்றது.

காந்தள் புவினால் செய்த கண்ணியையும், கொலை செய்யும் வில்லினையும், உடைய வேட்டுவர்கள் சிவந்த கொம்பினை உடைய காட்டுப்பசுவின் இறைச்சியையும், யானையின் வெள்ளியக் கொம்பினையும் எடுத்துக் கொண்டு கடைத் தெருவிற்குச் சென்று அங்கு அவர்கள் கள்ளுக்கு விலையாகக் கொடுத்து வாங்கினார்கள்.

**"காந்தள் அம் கண்ணி, கொலைவில், வேட்டுவர்**
**செங்கோட்டு ஆமான் ஊனொடு, காட்ட**
**மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு**
**பொன்னுடை நியமத்துப் பிழி நொடை**
**கொடுக்கும்"** **(பதிற்று:30:9-12)**

மதுவினைப் பலப் பெயர்களில் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கந்தாரம் எனும் மதுவிற்கு விலையாகப் பசு கொடுக்கப்பட்ட செய்தியைப் புறாநானூற்றின் 258ஆவது பாடல் குறிப்பிடுகின்றது.

***"மகிழ் நொடை பெற அராகி, நனைகவுள்***
***கான யானை வெண்கோடு சுட்டி***
***மன்று ஓடு புதல்வன் புன்தலை நீவும்"***
***(அகம்:245:10-12)***

எனும் வரிகள் இரவு நேரத்தில் கள் விற்கும் பெண்ணின் வீட்டின் அருகே செல்பவர்களுக்குக் கையில் கள்ளுக்கு விலையாக எதுவும் கொடுக்க வழியின்றித் தன் வீட்டின் கூரையில் இருக்கும் யானையின் வெண்நிற கொம்பினை எடுத்து வருமாறு தன் மகனின் தலையினை நீவுவதாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன.

பகைவர்களின் நாட்டினைக் கைப்பற்றி இடத்தினை அழித்து அந்த நாட்டு வேந்தனின் பட்டத்து யானையின் கொம்பினைக் கள்ளினது கொடி அசையும் கடைத்தெருவிற்குச் சென்று கள்ளிற்கு விலையாகக் கொடுத்து உண்டு ஆடினார்கள்.

***"வேந்து ஊர் யானை வெண்கோடு கொண்டு***
***கட் கொடி நுடங்கும் ஆவணம் புக்கு உடன்***
***அருங்கள் நொடைமை தீர்ந்த பின், மகிழ்சிறந்து"***
***(பதிற்:68:9-11)***

பகைநாட்டு அரசனின் பட்டத்து யானையின் தந்தத்தினைக் கொடுத்து கள்ளினை உண்பது வெற்றிப் பெற்ற அரசனின் பெருமையைக் குறிப்பதாக அமைந்தாலும் யானைத் தந்தம் உணவுப் பண்டமாற்றுக்கும் பயன்படுத்தப்பட்டது என்பது கவனத்திற்குரியது.

சிறுகுடியில் வாழும் மக்கள் பரந்த நிலத்தில் மலை நெல்லை விதைப்பர். சில வேளைகளில் இக்குறிஞ்சி நில மக்களுக்கு உணவின்றிப் பசித்து வாடும் போது வலிமையான யானையின், கொம்பினை விற்று அதில் இருந்து கிடைக்கும் விலைக்குப் பதில் உணவு பெற்று உண்டு வாழ்வர். இதனை,

***"அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்***
***பரு இலைக் குளவியொடு பசுமரல் கட்டும்***
***காந்தள் அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென,***
***கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத்து உண்ணும்"***
***(குறுந்:100.1-4)***

எனும் குறுந்தொகையின் வரிகள் குறிஞ்சி நில மக்கள் பசித்திருக்கும் போது யானையின் கொம்புக்குப் பதிலாக உணவு பெற்று உண்ட செய்தியை விளக்குகின்றன. குறிஞ்சி நில மக்கள் உணவின்றித் தவித்த குறிப்பினையும் இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

காட்டில் பெண் யானை அலறித் துடிக்க வேடர்கள் அவற்றிடமிருந்து பிரித்து வந்த ஆண் யானைக் கன்றினைக் கள் விற்கும் வீட்டின் வாசலில் கொண்டு வந்து கட்டி அதற்குப் பதிலாக கள்ளினைப் பெற்றுச் சென்றனர்.

***"கறை அடி மடப்பிடி கானத்து அலற,***
***களிற்றுக்கன்று ஒழித்த உவகையர், கலி சிறந்து,***
***நெடுங் கொடி நுடங்கும் நியம மூதூர்,***
***நறவு நொடை நல் இல் புதவு முதற் பிணிக்கும்"***
***(அகம்:83.3-10)***

எனும் அகநானூற்றின் பாடல் வரிகள் வழியின் கொடுமைகளைச் சுட்டிக் காட்டும் போது பண்டமாற்று அந்நில மக்களிடையே எவ்வாறு நிகழ்கின்றது என்பதனையும் வருணிக்கின்றது.

**பாதீட்டில் விலங்கினங்கள்**

வேட்டைக்குச் சென்று வரும் தலைவன் தான் கொண்டு வரும் பொருட்களைத் தன் சுற்றத்தாருக்கும் பகிர்ந்து கொடுப்பதே பாதீடு ஆகும். பசுவினைக் கவர்ந்து வரும் வெட்சி மறவர்கள் தன் நாட்டிற்கு வந்ததும் தன் மக்கள் அனைவருக்கும் பசுக்களைப் பகிர்ந்தளித்து கொடுப்பான் என்பதனை புறப்பொருள் வெண்பாமாலை நூற்பாவின் (வெட்சிப் படலம். 13) மூலம் அறிய முடிகின்றது.

தன் பகைவர் நாட்டில் இருந்து கொண்டு வரும் பொருட்களையெல்லாம் தன் சுற்றத்தார்களுக்குப் பகிர்ந்தளித்து கொடுக்கும் அரசர்களும், தலைவனும் விலங்குகளையும் தன் சுற்றங்களுக்குக் கொடுத்து உண்ட செய்திகளையும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. எழினி எனும் மன்னன் தன் பகைவர் நாட்டிற்குத் தன் படை வீரர்களுடன் சென்று விழா இல்லாத நாளிலும் கூட செம்மறியாட்டுக் கறியை உண்டதாக புறநானூற்றின்,

***"விழவின்று ஆயினும், படு பதம் பிழையாது,***
***மைஊன் மொசித்த ஒக்கலொடு"***
***(புறம்:96.6,7)***

எனும் வரிகளால் அறியலாம். தான் படையெடுத்துச் செல்லும் ஊரில் வெற்றியைக்

கொண்டாடுவதாகவே இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன. தன் பகைவர்களை வென்ற மகிழ்ச்சியினைக்கொண்டாடுவதற்காகவேவிழா இல்லாமல் போனாலும் தன் படை வீரர்களுடன் செம்மறியாட்டுக் கறி உண்டு தன் மகிழ்ச்சியை மன்னன் வெளிப்படுத்தினான் என்பதையே இவ்வரிகள் புலப்படுத்துகின்றன.

பாரி வேந்தன் இறந்தப்பின்னும் அவனுடைய சிறப்பினை எடுத்துக் கூறுகிறார் கபிலர். பாரி வேந்தன் தன் நாட்டிற்கு வரும் சுற்றத்தாருக்கும், தன்னைப் போன்ற புலவர்களுக்கும் எல்லாச் செல்வமும் கொடுத்து ஆட்டுக் கிடாயை வெட்டி சமைத்து ஊன் சோறு தந்ததைப் புறநானூற்றில் பாடியுள்ளார். இதனை,

**"மட்டு வாய் திறப்பவும், மைவிடை வீழ்ப்பவும்,**
**சுட்டு ஆன்று ஆனாக் கொழுந்துவை ஊரன்**
**சோறும்"** *(புறம்:113.1,2)*

எனும் வரிகள் குறிப்பிடுகின்றன. பாரி தன்னை நாடி வரும் இரவலர்களுக்கும், புலவர்களுக்கும் ஆட்டுக் கிடாய் சமைத்துக் கொடுத்து தானும் உண்டான் என்பதை இவ்வரிகள் புலப்படுத்து கின்றன.

தினைக்கதிரை ஆண் பன்றி தன் பெண்பன்றியுடன் மேய வந்தது. அவ்வாறு மேய வந்த ஆண் பன்றியைக் கானவன் மறைந்திருந்து வில்லினால் அம்பெய்து கொன்று விடுவான். அவன் கொல்லும் பன்றியினைத் தன் மனைவியிடம் கொடுப்பான். அவள் அப்பன்றியினை அறுத்து தன் குடிகள் அத்தனைக்கும் பகுத்துக் கொடுப்பாள். இதனை,

**"பிணர்ச் சுவற் பன்றி தோல்முலைப்**
**பிணவொடு,**
**கணைக்கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்,**
**கல் அதர் அரும் புழை அல்கி, கானவன்**
**வில்லின் தந்நத வெண் கோட்டு ஏற்றை,**
**புனை இருங் கதுப்பின் மனையோள்**
**கெண்டி, குடி முறை பகுக்கும்"**
*(நற்:336.1-6)*

என்னும் நற்றிணை வரிகளால் உணர முடிகின்றது. கானவன் கொண்டு வந்து தரும் ஆண்பன்றியினை அவனின் மனைவி தன் சுற்றங்களுக்கு எவ்வாறு பகிர்ந்தளித்தளோ அது போல தலைவியும் தலைவன் கொண்டு வந்து கொடுக்கும் பொருட்களைத் தன் சுற்றங்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பதே இப்பாடல் வரிகள் தரும் குறிப்பு ஆகும்.

## முடிவுரை

பண்டாமாற்றின் மூலம் கள்ளைப்பெறவும் மற்ற நிலங்களில் உள்ள உணவுப் பொருட்களை பெறவும் விலங்கினங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதையே இக்குறிப்புகள் நமக்கு உணர்த்துகின்றன. யானைக் கன்று, தந்தம் ஆகியவை இங்குப் பண்டமாற்றுக்குப் பயன்படுத்தப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. தான் கொண்டதைத் தான் மட்டும் வைத்துக் கொள்ளாமல் மற்றவர்களோடும் தன் குடிகளோடும் பகிர்ந்து உண்டதையும் இக்குறிப்புகள் உணர்த்துகின்றன.

## துணை நின்ற நூல்கள்

1. ஆலிஸ். அ., 2007: பதிற்றுப்பத்து, சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
2. சாமிநாதையர்.உ.வே., 1971: புறநானூறு மூலமும் உரையும் சென்னை: உ.வே.சா நூல்நிலையம்.
3. செயபால். இரா., 2007: அகநானூறு, சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
4. சோமசுந்தரனார். பொ. வே., 2007: குறுந்தொகை, சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
5. நாராயணசாமி ஐயர்.அ., 2007:நற்றிணை, சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
6. மோகன். இரா., 2007: பத்துப்பாட்டு, சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
7. சோமசுந்தரனார். பொ. வே., 2002: புறப் பொருள் வெண்பாமாலை, திருநெல்வேலி: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
8. சுப்பிரமண்யன். ந.,2010: சங்க கால வாழ்வியல், சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
9. ஸ்டீபன். ஞா.,2010: தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும், சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்.